திரு. எம். எத்திராஜுலு : தலைவரவர்களே, இந்த மாதிரியான வழக்குகளை போலீசுக்கு அனுப்பி விசாரணை செய்துகொண்டிருக்கும் போது, இதை மட்டும் கொஞ்சம் நிறுத்தி வைக்கவேண்டுமென்று ஏதாவது அரசாங்கத்தால் சொல்லப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். மாவதன் : எந்த வழக்கு என்று குறிப்பிட்டுக் கேட்கவில்லை. பொதுவாக சட்டத்திலே ஒவ்வொரு கட்டத்திலும் அப்பீல் செய்வதற்கு வழியிருக்கிறது. அந்த அப்பீலில் இடைக்கால தடை உத்தரவு கேட்டால் கொடுக்கவும் சட்டத்தில் இடம் இருக்கிறது. இந்த அரசாங்கத்தினைப் பொறுத்தவரை, கொடுத்ததாக நினைவில்லை.

திரு. எம். எத்திராஜுலு : போலீசுக்குத் தெரிவித்த பிறகு, அரசாங்கம் அதை நிறுத்தி வைக்கவேண்டுமென்று தெரிவிக்கப்பட்டதா என்று தான் கேட்டேன். அப்படி ஏதாவது வழக்கு நிறுத்தி வைக்கவேண்டு மென்று தெரிவித்திருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : அதைத்தான் எந்த வழக்கை என்று கேட்டேன். போலீசுக்கு டிபார்ட்மெண்டில் உள்ளவர்கள் கம்ப்ளெயின்ட் கொடுக்கிறார்கள். அதை இன்வெஸ்டிகேட் செய்து போலீஸ்காரர்கள் வழக்கு தொடருகிறார்கள். அதற்கிடையிலே அந்த சட்டத்திற்குள்ளே அப்பீல் போடுவதற்கு வாய்ப்பு உண்டு.

திரு. டி. கே. சுப்பையா : தலைவரவர்களே, இந்த மாதிரியான வழக்குகளுள் திருச்சி கூட்டுறவு மத்திய பாங்க் வழக்கும் சேர்ந்திருக்கிறதா? அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : அது பற்றிய விவரமில்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்லப்படும்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மதுரை போடிநாயக்கனூர் கேஸ் வாபஸ் வாங்கப்பட்டது. இது அமைச்சருக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : வாபஸ் வாங்கப்பட்டதாகத் தெரியவில்லை. இங்கு சென்னையைப் பற்றித்தான் இருக்கிறது. மதுரை போடிநாயக்கனூர் பற்றி எழுதி அனுப்பினால், நிச்சயமாகச் சொல்ல முடியும். இந்த அரசாங்கம் வாபஸ் வாங்கவில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : முந்திய அரசாங்கம் வாபஸ் வாங்க மறுத்துவிட்டது. இந்த அரசாங்கம் தான் வாபஸ் வாங்கியிருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : இந்த அரசாங்கம் வாபஸ் வாங்க வில்லை என்று திரும்பவும் சொல்கிறேன். பாங்கின் பெயரைச் சொன்னால், இப்போதே அதுபற்றிச் சொல்கிறேன்.

திரு. என். ஆர். தியாகராஜன் : அந்த பாங்கின் பெயர் "போடி நாயக்கனூர் கார்டமம் பாங்கு"

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : இங்கு வழக்கு போடப்படவில்லை. போடப்பட்டு வாபஸ் வாங்கப்படவும் இல்லை. அது விசாரணை நிலையில் இருக்கிறது. போலீஸ் வழக்கு போட்டதாகத் தகவல் இல்லை.

Government Hospitals

*170 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is true that in most of the Government hospitals there is no sufficient stock of required medicines ;

4th March 1968]

(*b*) whether it is true that chloroforms and other important medicines which are necessary for performing operations are not available in Erskine Hospital, Madurai ; and

(*c*) the steps taken by the Government in this regard ?

மருத்துவச் சாலைகள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுச் சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழக அரசின் மருத்துவச் சாலைகள் பெரும்பாலானவைகளில் போதுமான, தேவையான மருந்துகள் இல்லையென்பது உண்மையா?

(இ) மதுரை எர்ஸ்கின் மருத்துவச் சாலையில் அறுவைச் சிகிச்சைக்குத் தேவையான மயக்க மருந்துகள், மற்ற அத்தியாவசிய மருந்துகள் இல்லையென்பது உண்மையா ?

(உ) இது சம்பந்தமாக சர்க்கார் எடுத்த நடிவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாஷா : (அ) and (இ) இல்லை.

(உ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில் மட்டும் இங்கே உள்ள ஆஸ்பத்திரிகளை கவனிப்பதில் ஆபீசர்களும், அமைச்சர்களும் அதிக அக்கறை செலுத்துகிறார்கள். ஜில்லா தலைநகரங்களிலும், தாலூகா தலைநகரங்களிலும் உள்ள ஆஸ்பத்திரிகள் கவனிக்கப்படுவதில்லை. அங்கே மருந்துகள் இல்லை. ஒரு பெரிய ஆஸ்பத்திரியில் மயக்க மருந்து இல்லை என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிந்துகொண்டுதான் கேட்கிறேன். இனிமேலாவது அதுபோன்ற நிலைமை இல்லாமல் பார்த்துக்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாஷா : உறுப்பினர் கூறுவது சரியல்ல. மாவட்ட வாரியாக ஒதுக்கப்பட்ட தொகையைப் படிக்கிறேன்.—

	ரூ.
செங்கற்பட்டு	3,28,000
வட ஆர்க்காடு	7,22,400
தஞ்சாவூர்	3,20,000
திருச்சிராப்பள்ளி	6,21,400
மதுரை	4,24,400
ராமனதபுரம்	3,70,200
திருநெல்வேலி	5,50,500
கன்னியாகுமரி (நாகர்கோவில் டி.பி. ஆஸ்பத்திரி சேர்த்து).	4,38,000
நீலகிரி	2,01,000
சேலம்	4,00,000
தர்மபுரி	1,10,700
கோயம்புத்தூர்	10,41,100
தென் ஆர்க்காடு	5,20,000

	RS.
Madras City (Hospitals under Director of Medical Education's control).	87,15,600
Mofussil hospital (under Director of Medical Education's control).	48,50,000

திரு. என். ஆர். தியாகராஜன் : இந்த புள்ளி விவரத்தைப் பார்க்கும் போதே இந்த அரசு எவ்வளவு பாரபட்சமாக நடந்துகொள்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். சென்னைக்கு ஒரு கோடி அளவுக்கு செலவு செய்யப்படுகிறது. சிறிய ஜில்லாவான ராமனாதபுரம் ஜில்லாவுக்கு ஆறு லட்சத்திற்கு மேல் செலவு செய்யப்படுகிறது. ஆனால் மிகப் பெரிய ஜில்லாவான 32 லட்சம் மக்கள் தொகையைக் கொண்ட மதுரை ஜில்லாவுக்கு 4 லட்சல் அளவில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படி குறைத்து செலவு செய்யப்படுவதால்தான் தேவையான மயக்க மருந்து போன்றவை கூட கொடுக்கமுடியாமல் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : சென்னையில் பெரிய மருத்துவ மனை இருக்கிறது. மாநிலத்திலுள்ள மக்கள் அந்த ஆஸ்பத்திரிக்கு அதிகமாக வருகிறார்கள். ஜனப்பெருக்கம் அதிகமாகவுள்ள இடம் சென்னை. அதையெல்லாம் கணக்குப்பார்த்துத்தான் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. கே. ராமதாஸ் : ஜில்லாவாரியாக ஒதுக்கப்பட்ட பணத்தை அமைச்சர் குறிப்பிட்டார்கள். ஆனால் குறிப்பிட்ட மருந்து ஆஸ்பத்திரியில் இல்லை என்று உறுப்பினர் கேட்டதற்கு அமைச்சரின் பதில் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : குறிப்பிட்ட மருந்தின் பெயர் என்ன என்று தெரிந்தால் சொல்லலாம்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் மயக்க மருந்து இல்லை. அதன் பெயர் தெரியவில்லை.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : என்ன மருந்து என்று பெயர் தெரியாமல் சொல்லமுடியாது.

• • • •

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : ராமனாதபுரத்திற்கு அதிகமாகவும் மதுரைக்கு கொஞ்சமாகவும் நிதி கொடுத்திருப்பதாக நண்பர் தியாகராசன் அவர்கள் சொன்னார்கள். எங்கள் ஜில்லாவில் அதிகமாக தீர்வை கொடுக்கிறார்கள். ஆகையால் எங்களுக்குக் கொடுப்பது அதிகம் என்று சொல்வதற்கில்லை. அதிகமாக இருக்கிறது என்று சொல்லியதால், அதைக் குறைக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டுமேன்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : Questions are over.

[NOTE.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—CALLING ATTENTION TO TERMINATION OF SERVICES OF NON-BASIC TRAINED TEACHERS FROM SENIOR (AIDED) BASIC SCHOOLS IN KOLLIDAM RANGE OF SIRKALI TALUK, MAYURAM EDUCATIONAL DISTRICT.

THIRU G. KRISHNAMOORTHY : MR. Chairman, Sir, I wish to call the attention of the Hon. the Minister for Education and Industries to a matter of urgent public importance, namely, the termination of services of non-Basic Trained Teachers from Senior (Aided) Basic Schools in Kollidam Range of Sirkali taluk, Mayuram Educational District, Thanjavur District, on and from the 5th February 1968 and the distress caused to such teachers.

** Expunged as ordered by the Chair.